**விவசாய கூலி தொழிலாளர்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்**

தர்மபுரி,

விவசாய கூலித்தொழி லாளர் களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்மாநில விவ சாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

மாநிலக்குழு கூட்டம்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநிலக்குழு கூட்டம் தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் நடந்தது. இந்த கூட்டத்தில் சங்கத்தின் தேசிய தலைவர் ராமமூர்த்தி மாநிலத்தலைவர் தங்கமணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலா ளர் நஞ்சப்பன் எம்.எல்.ஏ. மாவட்ட பொறுப்பாளர் பிரதாபன் சங்க துணைத் தலைவர்கள் பத்மாவதி, பழனிச்சாமி ஆகியோர்கோரிக் கைளை விளக்கி பேசினார் கள்.

கூட்டத்தில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் முத்தரசன் பேசியதாவது:-

மத்திய அரசின் விவசாய விரோத கொள்கைகளால் கடந்த 10 ஆண்டுகளில் 8 லட்சத்து 67 ஆயிரத்து 582 விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். விவசாயிகளின் எண்ணிக்கை குறையும் அதே நேரத்தில் விவசாய தொழி லாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பருவ மழை பொய்த்ததாலும் காவிரி ஆற்றில் தமிழகத்திற்குரிய தண்ணீர் கிடைக்காததாலும் தமிழகத்தின் பெரும்பகுதியில் விவசாய பணிகள் பாதிக்கப் பட்டுள்ளன.

வறட்சி நிவாரணம்

சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்து இருப் பது வரவேற்கத்தக்கது. வறட்சி நிவாரண பட்டியலில் தகுதி யுள்ள பலர் விடுபட்டிருப்பதாக மாநிலம் தழுவிய அளவில் புகார் எழுந்துள்ளது. தகுதி உள்ள அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியின் காரணமாக விவசாயிகள் மட்டுமின்றி விவசாயத்தையே முழுமை யாக நம்பியிருந்த விவசாய கூலித்தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டு உள் ளனர். எனவே அவர்களுக் கும் வறட்சி நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசி னார். இந்த கூட்டத்தில் தமிழ் மாநில விவசாய தொழி லாளர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**ஈரோட்டில் காலிங்கராயன் வாய்க்காலில், பேபி கால்வாய் அமைக்கும் பணி தொடங்கியது**

ஈரோடு,

ஈரோட்டில், காலிங்கராயன் வாய்க்காலில் பேபி கால்வாய் அமைக்கும் பணி தொடங்கியது.

<u>சாய கழிவு நீர்</u>

ஈரோட்டில் மிக முக்கியமான வாய்க்காலாக காலிங்கராயன் வாய்க்கால் உள்ளது. காலிங்கராயன் வாய்க்காலில் சாய, சலவைப்பட்டறை கழிவு நீர் மற்றும் தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீர் கலந்து வந்தது. இதன் காரணமாக காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் விவசாயம் செய்த விவசாயிகள் காலிங்கராயன் வாய்க்காலில் கழிவு நீர் கலப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். மேலும் காலிங்கராயன் வாய்க்காலில் சாயம் மற்றும் தோல் கழிவுநீரை கலக்கும் நிறுவனங்கள் மீது மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும், மாவட்ட நிர்வாகமும் கடுமையான நடவடிக்கை எடுத்தது. ஆனாலும் இந்த பிரச்சினை தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

<u>காங்கிரீட் தடுப்பு சுவர்</u>

எனவே காலிங்கராயன் வாய்க்காலில் சாய மற்றும் தோல் கழிவு நீர் கலப்பதை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை

விடுத்து வந்தனர். இதனால் காலிங்கராயன் வாய்க்காலின் 2 புறமும் காங்கிரீட் தடுப்பு சுவர் கட்டவும், வாய்க்காலின் உள்பகுதியில் காங்கிரீட் தளம் அமைக்கவும், கால்வாயின் ஒரு கரையில் ஆய்வுப்பாதை அமைக்கவும் அரசு உத்தரவிட்டது. மேலும் காலிங்கராயன் வாய்காலில் பாசன நீர் செல்லும் இடத்தின் அருகில் சாயம் மற்றும் தோல் கழிவு நீர் செல்வதற்கு வசதியாக பேபி கால்வாய் அமைக்கவும் அரசு உத்தரவிட்டது.

<u>பேபி கால்வாய் பணி தொடக்கம்</u>

இதையடுத்து காலிங்கராயன் வாய்க்காலில் மாயவரம் பாலத்தில் இருந்து வைராபாளையம் வரை 10.4 கிலோ மீட்டர் தூரத்துக்கு காங்கிரீட் தடுப்பு சுவர் அமைக்கும் பணி ரூ.5 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டது. இந்த நிலையில் காலிங்கராயன் வாய்க்காலின் 2 புறங்களிலும், தடுப்பு சுவர் அமைக்கும் பணி, ஆய்வு பாதை அமைக்கும் பணிகள் சுமார் 70 சதவீத அளவுக்கு முடிந்து விட்டன. தற்போது பேபி கால்வாய் அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன. இந்த பணிகள் வருகிற ஜூலை மாதம் 15–ந் தேதிக்குள் முடிவடையும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

**காங்கயம் தாலுகாவில் ரூ.11½ கோடி வறட்சி நிவாரண நிதி என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ.வழங்கினார்**

காங்கயம்,

காங்கயம் தாலுகாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.11½ கோடியை நிவாரண உதவியாக என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்.

<u>ரூ.11½ கோடி நிவாரண உதவி</u>

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவி தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி காங்கயம் தாலுகாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 31 ஆயிரத்து 570 விவசாயிகளுக்கு ரூ.11 கோடியே 52 லட்சத்தை நிவாரண தொகையாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகை தற்போது அந்தந்த பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. காங்கயம் தொடக்க

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை சேர்ந்த 1,819 விவசாயிகளுக்கு அரசு அறிவித்த வறட்சி நிவாரண தொகை வழங்கப்பட்டது.

என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ.

இந்த நிவாரணத்தொகை வழங்கும் நிகழ்ச்சி சங்க வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் ஏ.பி .துரைசாமி தலைமை தாங்கினார். நகராட்சி தலைவர் வெங்கு என்கிற மணிமாறன் முன்னிலை வகித்தார். இதில் என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1,819 விவசாயிகளுக்கு ரூ.77 லட்சத்து 54 ஆயிரத்து 310ஐ நிவாரண தொகையாக வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் நகராட்சி துணை தலைவர் சி .கந்தசாமி, வீரணம்பாளையம் ஊராட்சி தலைவர் காந்திமதி தங்கவேல், அ.தி.மு.க. மாவட்ட விவசாய பிரிவு தலைவர் கிஷோர்குமார், சங்கத்தின் துணை தலைவர் என்.பழனிசாமி, சங்க இயக்குனர்கள் ஏ.ஏ.பழனிசாமி, பாலசுப்பிரமணி, ரகுநாதன், கருப்பசாமி, ராஜ், கீதாமணி, வனிதாமணி, வளர்மதி, காலனி பழனிசாமி, அருள், முருகேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருச்சியில் சூறை காற்றினால் வாழைகள் சேதம்: ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் சாய்ந்த வாழையை விவசாயிகள் எடுத்து வந்து கலெக்டரிடம் கோரிக்கை மனு**

திருச்சி

திருச்சியில் சூறை காற்றினால் வாழைகள் சாய்ந்ததால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் விவசாயிகள் கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் கூட்டம்

திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தலைமை தாங்கி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கை எடுத்தார்.

கூட்டத்தில் மனு கொடுப்பதற்காக தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் தலைமையில் ஏராளமான விவசாயிகள், காற்றில் சாய்ந்த வாழையை தூக்கிக்கொண்டு கலெக்டர் அலுவலகம் வந்தனர்.

ரூ.1 லட்சம் நிவாரணம்

அவர்கள் கொடுத்த மனுவில், ''திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அடித்த சூறை காற்றினால் சுமார் 50 கிராமங்களில் 24 ஆயிரம் ஏக்கரில் நடப்பட்டிருந்த 20 லட்சம் வாழைகள் சாய்ந்து சரிந்தன. இதனால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கூறியிருந்தனர்.

மருங்காபுரி பகுதி அ.தி.மு.க. ஊராட்சி செயலாளர் கோபால், பொதுமக்கள் சார்பில் அளித்த மனுவில், ''புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மருங்காபுரி தாலுகா அலுவலகத்தை மருங்காபுரியிலே கட்ட வேண்டும். இதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்தி தர பொதுமக்கள் தயாராக உள்ளனர். எனவே மருங்காபுரி தாலுகா அலுவலகத்திற்கு தேவையான கட்டிடங்களை மருங்காபுரி தவிர வேறு எங்கும் அமைக்க கூடாது'' என குறிப்பிட்டு இருந்தனர்.

டாஸ்மாக் கடை

லால்குடி அருகே செம்பரை கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கொடுத்த மனுவில், ''தங்கள் பகுதியில் உள்ள மின் மாற்றி பழுதடைந்து விட்டதாகவும். இதனால் விவசாயத்திற்கு தேவையான மின்சாரம் கிடைக்கப்பெறாமல் 20 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. எனவே செம்பரையில் பழுதடைந்த மின்மாற்றியை சீரமைத்தோ அல்லது புதியதாக மின் மாற்றி அமைத்தோ தர வேண்டும்'' என கோரியிருந்தனர்.

இதேபோல விடுதலை சிறுத்தைகள் கட்சி காஜாமலை பகுதி செயலாளர் செந்தில்முருகன், இளைஞர் காங்கிரஸ் தலைவர் வசந்தகுமார் ஆகியோர் தலைமையில் எடமலைப்பட்டிபுதூர் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கலெக்டர் அலுவலகம் வந்து அளித்த மனுவில், தங்கள் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

ரேசன் கார்டுகளை ஒப்படைக்க முயற்சி

திருச்சி அருகே உத்தமர்சீலி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானவர்கள் தங்களது ரேசன் கார்டுகள், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை கலெக்டரிடம் ஒப்படைக்க போவதாக கூறி வக்கீல் பொன்முருகேசன் தலைமையில் கலெக்டர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக திரண்டு வந்தனர். அவர்களை பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் நுழைவு வாயில் பகுதியில் தடுத்து நிறுத்தி 5 பேர் மட்டும் உள்ளே சென்று மனு கொடுக்க அனுமதித்தனர். இதையடுத்து அனுமதிக்கப்பட்ட நபர்கள் மட்டும் கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

அப்போது தங்களது ரேசன்கார்டுகள், வாக்காளர் அடையாள அட்டையும் கொடுக்க முயன்றனர். இதனை கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வாங்க மறுத்து கோரிக்கை குறித்து கேட்டார். அப்போது அவர்கள் கூறுகையில், ''தங்கள் பகுதியில் வசித்து வரும் ஒரு பிரிவினர் எங்களை தரக்குறைவாகவும், தகாதமுறையிலும் பேசி வருகின்றனர். இது குறித்து நெம்பர் 1 டோல்கேட் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. எனவே தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்களது ரேசன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டைகளை திரும்ப ஒப்படைத்து விட்டு வேறு இடத்திற்கு செல்கிறோம்'' என்றனர்.

நடவடிக்கை

இதையடுத்து கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் இது குறித்து உதவி கலெக்டர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். இதேபோல பொதுமக்கள் அளித்த மனுக்களையும் பெற்றுக்கொண்ட அவர் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உடனடியாக தீர்வு காண அறிவுறுத்தினார்.

## வடகாடு பகுதியில் சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு இழப்பீடு வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

வடகாடு

வடகாடு பகுதியில் வீசிய சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட பகுதி களை பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவ சாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பயிர்கள், மரங்கள் நாசம்**

கோடை மழை இல்லாமல் வறண்டு கிடந்த வடகாடு பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரவில் பலத்த காற்றுடன் லேசான மழை பெய்தது. இதில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களும், பலா உள்ளிட்ட மரங்களும் சாய்ந்தன.

மரங்கள் மற்றும் கிளைகள் சாய்ந்து சாலை, மின்கம்பி, தொலைத்தொடர்பு வழித் தடத்தில் விழுந்ததால் அதற் கான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இத்தகைய பாதிப்பால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப் படுகிறது. இதனால் நூற்றுக் கணக்கான விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

**நடவடிக்கை இல்லை**

இது குறித்து விவசாயி கருப்பையா கூறுகையில், கடும் வறட்சி, மின் தட்டுப்பாடு இவற்றிற்கிடையில் கால் நடைகளை விற்று, வட்டிக்கு கடன் பெற்று விவசாயம் செய் தோம். பலத்த காற்றால் சில நிமிடங்களில் இவையனைத் தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதோடு, மின்சாரம், தொலைத்தொடர்பு உள் ளிட்ட சேவைகளும் பாதிக்கப் பட்டுள்ளன. குடிநீருக்கு கூட தவிக்கும் இந்தப் பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மேற் கொள்ள அதிகாரிகளால் முறையான நடவடிக்கை இல்லை.

**இழப்பீடு**

சூறைக்காற்றால் பாதித்த பகுதிகளை பார்வையிடாத தால் இழப்பீடு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் சிறப்பு கவனம் செலுத்தி பாதிக்கப் பட்ட பகுதிகளை ஆய்வு மேற் கொண்டு, இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும், என்றார்.

இதுவே பாதிக்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த விவசாயிகளின் கோரிக்கையாகும்.

**2நாளில் மொச்சை விலை மூடைக்கு 1,000 அதிகம் தேங்காய் விலை ஏறுமுகம்**

மதுரை,

மொச்சைப் பயறு விலை கடந்த 2 நாட்களில் மூடைக்கு ரூ. ஆயிரம் அதிகரித்துள்ளது. தேங்காய் ரகங்களின் விலையும் உயர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது.

<u>தேங்காய் விலை ஏறுமுகம்</u>

மதுரை மார்க்கெட்டில் உணவுப் பொருட்களின் விலை சற்று உயர்ந்தே காணப்படுகிறது. காய்கறிகள் வரத்து இல்லாததால் அவற்றின் விலை தாறுமாறாக உயர்ந்து உள்ளது. இருந்தபோதிலும் மார்க்கெட்டுகளில் காய்கறிகள் குறைந்த அளவிலேயே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தேங்காய்களின் விலையும் கடந்த வாரத்தை விட கடந்த 3 நாட்களாக அதிகரித்துள்ளது. ஆயிரம் எண்ணிக்கை கொண்ட பொள்ளாச்சி தேங்காயின் விலை கடந்த வாரம் 8,500 ஆக இருந்தது. தற்போது இதன்விலை ரூ.9,500 ஆக உள்ளது. இதேபோல் கீழக்கரை ரூ.4,000, மதுரை நாடு ரூ.4,000, சோழவந்தான், வாடிப்பட்டி ரூ.5,000 ஆகிய விலைகளில் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை ஆயிரம் தேங்காய்களுக்கு கடந்த வாரத்தை விட தற்போது சுமார் ரூ.500 வரை விலை உயர்ந்துள்ளது. தொடர்ந்து தேங்காய் விலை ஏறுமுகமாக இருந்து வருகிறது. சில்லறை விற்பனையில் தேங்காய் விலையில் வியாபாரிகள் கூடுதல் விலைக்கு விற்பார்கள்.

<u>3 மாதத்தில் இரு மடங்கு விலை</u>

பருப்பு மார்க்கெட்டில் சில பயறு வகைகளின் விலை நிரந்தரமாக இருந்து வருகின்றன. 100 கிலோ கொண்ட மூடை பாசிப்பருப்பு ரூ.7,200, பாசிப்பயறு ரூ.6,400, துவரை 6,800 ஆகிய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலையில் மாற்றம் இல்லாமல் தொடர்ந்து நிலையாக இருந்து வருகிறது.

ஆனால் மொச்சை விலை கடந்த 2 நாட்களுக்கு முன்பு ரூ.7,300 ஆக இருந்தது. நேற்றைய நிலவரப்படி இதன் விலை ரூ.8,400 ஆக உள்ளது. பழனி, பொள்ளாச்சி பகுதியில் அதிகம் விளையக்கூடிய போர் மொச்சை கடந்த 3 மாதங்களில் படிப்படியாக அதிக அளவில்

விலை உயர்ந்தது. 100 கிலோ எடை கொண்ட இதன்விலை நேற்றைய நிலவரப்படி ரூ.14 ஆயிரமாக விற்பனை செய்யப்பட்டது. 3 மாதத்துக்கு முன் இதன் விலை ரூ.6,300 ஆக இருந்தது. இதன் அடிப்படையில் 2 மடங்கு அளவுக்கு இதன் விலை உயர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

போர் மொச்சை மதுரை, தேனி, உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் விரும்பி சாப்பிடக் கூடியவை. மொச்சையை தோல் நீக்கி காய வைத்த பயறு தான் போர் மொச்சை.

**வாழை இலைக்கட்டு விலை சரிவு**

மேலூர்,

மேலூர் மார்க்கெட்டில் கடந்த வாரம் 200 இலைகளை கொண்ட ஒரு கட்டு ரூ.1,500 வரை விலை போனது. இன்று வைகாசி மாதத்தின் கடைசி முகூர்த்த நாள். மேலும் காற்றின் வேகமும் அதிகமாக இருப்பதால் கிழியும் முன்பாகவே இலைகளை அறுத்தால் நல்ல விலை கிடைக்கும் என்ற எண்ணத்தில் விவசாயிகள் இலையை அறுத்துள்ளனர். எனவே, வரத்து அதிகரித்ததால் விலை பெரும் சரிவை சந்தித்துள்ளது. நேற்று ஒரு கட்டு(200 இலை) 100 முதல் 175 வரை மட்டுமே விலை போனது.

**விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தல்**

சிவகங்கை,

விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என்று விவசாயி கள் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

<u>மறுகணக்கெடுப்பு</u>

சிவகங்கை மாவட்ட விவ சாயிகள் சங்க தலைவர் கலை யரசன் விடுத்துள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:

201213ம் ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சி காரணமாக தமிழகம் முழுவ தும் வேளாண் உற்பத்தி வெகு வாக பாதிக்கப்பட்டது. இத னால் தமிழக அரசு சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரண தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது.

இதில் சிவகங்கை மாவட்டத் தில் அதிகாரிகளின் கணக்கெ டுப் பில் சில பகுதிகளுக்கு நிவா ரணம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட் டுள்ளது. இதில் பெரிய கோட்டை பிர்காவில் உள்ள காயாங்குளம், குடஞ்சாடி, கிடாபுரி, தமறாக்கி பிர்க்கா குமாரப்பட்டி, தாராம் பேட்டை, மீனாட்சிபுரம் போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரண தொகை கிடைக்க வில்லை. எனவே மாவட்ட நிர்வாகம் விடுப்பட்ட கிராமங்களில் மறு கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<u>கூட்டமைப்பு தலைவர்</u>

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் புல்லுக்குடி உல.நேரு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கெடுத்து உடன டியாக நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளை கிராம நிர்வாக அலுவலர்கள் உதவியாளர்களை வைத்து காண்டு கணக்கெடுத்ததின் விளைவாக பல கிராமங்களில் பட்டாதாரர்களுக்கு ஒன்றும் கிடைக்காமல் போய்விட்டது. இதற்கு அரசு காரணம் என்று கூற முடியாது.

கணக்கில் விடுபட்ட விவ சாயிகள் முதல் வருக்கு மனுக் களை மட்டுமே அனுப்புவதை தவிர வேறு வழிதெரியாமல் உள்ள னர். சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட எல்கையில் உள்ள திருவாடானை, குளத் தூர், நாகனி, கற்களத்தூர் உள் ளிட்ட வருவாய் கிராமங்களில் பல விவசாயிகள் பெயரில் பட்டாக்கள் விடுப்பட்டுள் ளன. இதனால் அவர்களுக்கு எந்த வறட்சிநிவாரணமும் கிடைக்காமல்போய்விட்டது. எனவே தமிழக அரசுவிடுப் பட்ட விவசாயிகளுக்கு அர சின் முழு நிவாரண தொகையை வழங்க வேண்டும் என கேட்டுகொள்கிறேன். இவ் வாறு அவர் அந்த அறிக்கை யில் கூறியுள்ளார்.

**மழை பெய்யாத நிலையிலும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து பெருஞ்சாணி நீர்மட்டம் மேலும் 2½ அடி உயர்வு**

நாகர்கோவில்

மழை பெய்யாத நிலையிலும் குமரி மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு இன்று தண்ணீர் வரத்து தொடர்ந்து கொண்டே இருந்தது. இதனால் பெருஞ்சாணி நீர்மட்டம் மேலும் 2½ அடி உயர்ந்தது.

மாறிவிட்டது

குமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை கடந்த சில நாட்களாக அவ்வப்போது பெய்து வருகிறது. கன மழையாக இன்றி, சாரல்போல பொழிந்தாலும் மாவட்டத்தின் சீதோஷ்ண நிலை பிற மாவட்டங்களில் இருந்து மாறிவிட்டது. இரவில் குளிர்காற்று வீசுகிறது.

கடந்த 2 தினங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக அணைகளுக்கு தண்ணீர் அதிக அளவு வந்து சேர்ந்தது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 923 கனஅடி தண்ணீர் வந்தது. பெருஞ்சாணி அணையில் வினாடிக்கு 573 கனஅடி தண்ணீர் சேர்ந்தது.

இதனால் அணைகளில் நீர்மட்டம் சற்று உயர்ந்தது. குறிப்பிடும்படியாக பெருஞ்சாணி அணை நேற்று ஒரே நாளில் 5½ அடி உயர்ந்து 28.70 அடியானது.

மழை பெய்யவில்லை

இந்நிலையில் நேற்று முதல் இன்று மதியம் வரை குமரி மாவட்டத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடும்படி மழை பெய்யவில்லை. இதனால் மழை பதிவுக்கு வாய்ப்பில்லாமல் போனது. ஆனால் மழை பெய்யாத இந்த நிலையிலும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து கொண்டே இருந்தது.

பேச்சிப்பாறை அணைக்கு இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 236 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணிக்கு வினாடிக்கு 146 கனஅடி தண்ணீரும் வந்தது. இதைப்போல சிற்றார்–1 மற்றும் சிற்றார்–2 அணைகளுக்கு முறையே 12 மற்றும் 19 கனஅடி தண்ணீர்

வந்தது. இதன் காரணமாக பெருஞ்சாணி அணையில் நீர்மட்டம் மேலும் 2½ அடி உயர்ந்து 30.10 அடியானது.

இதற்கிடையே குமரி மாவட்ட விவசாயிகள் கன்னிப்பூ சாகுபடிக்கு தயாராகி வருகிறார்கள். இதற்காக அணையில் அதிகளவு தண்ணீர் சேர வேண்டும் என்றும் வேண்டுகிறார்கள்.

![தினகரன்]

தினகரன்

**கிருஷ்ணகிரியில் மாங்கனி கண்காட்சி வரும் 15ல் துவக்கம்**



கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் பரபரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்திலேயே அதிக பரப்பில் மா சாகுபடி செய்யப்படும் மாவட்டமாக இம்மாவட்டம் உள்ளது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் மாங்கனி கண்காட்சி நடத்தப்படுகிறது. அதன்படி 21வது ஆண்டு அகில இந்திய மாங்கனி கண்காட்சி, வரும் 15ம் தேதி துவங்கி 23 நாட்கள் நடைபெறுகிறது. கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இக்கண்காட்சியில் வேளாண் துறை, கால்நடைத்துறை, தோட்ட கலைத்துறை, வனத்துறை, மீன்வளத்துறை, சுற்றுலாத்துறை, பொது சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட விளை யாட்டு சாதனங்கள், பல்வேறு கலைநிகழ்ச்சிகள் தினமும் நடத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

**மேட்டூர் அணை வறண்டது : டெல்டா பாசனத்துக்கு நீர்திறப்பு இல்லை**



மேட்டூர்: தென் மேற்கு பருவமழை தொடங்கியும் நீர் பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைவாகவே உள்ளது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டும¢ ஜூன் 12 தண்ணீர் திறந்து விடமுடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.மேட்டூர் அணை மூலம் காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி முதல் ஜனவரி 28ம் தேதி வரை காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருந்தால் மட்டுமே, பருவமழையை எதிர்நோக்கி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். குறுவை, சம்பா, தாளடி பயிர்களுக்கு சுமார் 330 டிஎம்சி வரை தண்ணீர் தேவைப் படும். டெல்டா மாவட்டங்களில் பெய்யும் மழை யின் அளவை பொறுத்து பாசனத்துக்கான தண்ணீர் தேவை குறையும்.

கடந்த 79 ஆண்டுகளில் 15 ஆண்டுகள் மட்டுமே ஜூன் 12ல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இருந்ததால், 11 ஆண்டுகள் ஜூன் 12ம் தேதிக்கு முன்பாகவும் 53 ஆண்டுகள் தாமதமாகவும் நீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது 80வது ஆண்டிலும் ஜூன் 12ல் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தண்ணீர் திறப்புக்கான ஆயத்தப்பணிகள் ஏதும் நேற்று காலை அணையில் நடக்கவில்லை. அதிகாரிகளிடம் கேட்டபோது, அரசிடம் இருந்து எந்த உத்தரவும் வரவில்லை என்றனர்.

தற்போது, குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள், நிலத்தை உழுது நாற்று நடவு செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 6 மாதங்களாக காவிரி ஆறு வறண்டு

கிடப்பதால் நிலத்தடி நீர் மட்டமும் குறைந்துபோனது. இதனால் கிணற்று பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளும் சாகுபடி செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர்.

அதே நேரத்தில் தற்போது பருவமழை பெய்தாலும்கூட, கர்நாடகாவில் உள்ள அணைகள் நிரம்பினால் மட்டுமே அணை க்கு உபரிநீர் வந்து சேரும். ஆனால், ஜூன் 20க்குள் வருவதற்கான வாய்ப்பில்லை. இதனால் நடப்பு ஆண்டில் குறுவை சாகு படி அதிகளவில் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை வெளியிட்டும் வறட்சி காரணமாக குறிப்பிட்ட அளவு தண்ணீரை திறந்து விட முடியாது என கர்நாடகம் மறுத்துள்ளது. இந்நிலையில், காவிரி மேலாண்மை கமிட்டி கூட்டம் இன்று நடக்கிறது. இதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என தெரிகிறது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் நேற்று காலை 17.99 அடியாக இருந்தது. நீர் இருப்பு 3.53 டிஎம்சி. நீர்வரத்தும் 72 கன அடியாக குறைந்துபோனது. அதே நேரத்தில், குடிநீர் தேவைக்காக 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

**வெடிக்கும் தருவாயில் காய்கள் பவானிசாகர் பகுதிகளில் பருத்தி சாகுபடி தீவிரம்**

சத்தியமங்கலம். : சத்தியமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதியில் பருத்தி சாகுபடி தீவிரமடைந்துள்ளது.

சத்தியமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளான பவானிசாகர், ராஜன்நகர், புதுவடவள்ளி, சிக்கரசம்பாளையம், கே.என்.பாளையம், அரியப்பம்பாளையம், செண்பகபுதூர், உக்கரம் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ள கரிசல் மண் நிலம் பருத்தி சாகுபடி செய்வதற்கேற்றதாகும். எனவே ஆண்டு தோறும் மாசிப்பட்டத்தில் இந்தப் பகுதிகளில் விவசாயிகள் பருத்தி நடவு செய்கின்றனர்.

கடந்த ஆண்டு நல்ல விலை கிடைத்ததால் இந்த ஆண்டும் விவசாயிகள் அதிக அளவில் பருத்தி பயிரிட்டுள்ளனர். 5 மாத காலப்பயிரான பருத்தியில் எல்ஆர்ஏ, ஆர்சிஹெச், பிரம்மா, ஆஷா உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் உள்ளன. கடந்த மாசி மாதம் உழுது தயார் செய்யப்பட்ட நிலத்தில் 3 க்கு 3 அடி இடைவெளி கொண்ட பார் அமைக்கப்பட்டு பருத்தி விதைகள் ஊன்றப்பட்டன. நடவு செய்யப்பட்டுள்ள செடிகள் பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதா என கண்காணிக்கப்பட்டு அவ்வப்போது பூச்சி மருந்து அடித்தனர். தற்போது காய்கள் வெடிக்கும் தருணத்தில் உள்ளன.

கடந்த ஆண்டு பருத்தி கிலோ ரூ.52 வரை விற்பனையானது. இந்த ஆண்டு கிலோ

ரூ.45க்கு விற்பனையாகிறது. ஏக்கருக்கு 10 முதல் 12 குவிண்டால் வரை விளைச்சல் இருந்தால் ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும் என் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**ஏரிகளில் குறையும் தண்ணீர் புதுவையில் வறட்சி அபாயம்**

பாகூர், : புதுவையில் உள்ள 84 ஏரிகளில் மழை நீரை தேக்கி வைப்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த ஆண்டு தமிழகம்&புதுவையில் குறைவான மழை பெய்தது. இதனால் ஏரிகளில் முழுமையாக மழை நீரை தேக்கி வைக்க முடியவில்லை. பல ஏரிகள் மீன் குத்தகைக்காக விடப்பட்டு உள்ளது. இதில் மீன் பிடித்து வருகின்றனர். பல வகையான கெண்டை மீன்களை பிடித்து விட்டு சேற்றில் இருக்கும் விரால் மீன்களை பிடிக்கின்றனர்.

இதற்காக ஏரியில் உள்ள நீரை மின் மோட்டார் வைத்து வெளியேற்றுகின்றனர். இந்த நீர் வயலுக்கு பயன்படாமல் காய்ந்து போகிறது. இவ்வாறு தொடர்ந்து நீரை வெளியேற்றி வருவதால் ஏரி காய்ந்து வெடிப்பு ஏற்படும் சூழ்நிலையில் காணப்படுகிறது. தற்போது கோடை காலம் என்பதால் ஏரி நீரை தொடர்ந்து குத்தகை எடுத்தவர்கள் வெளியேற்றி வருகின்றனர்.

ஏரி நீரை வெளியேற்ற மோட்டாருக்கு உரிய மின்சாரம் எப்படி எடுக்கிறார்கள்? நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு அதிகாரிகள் இது குறித்து கவலை படுவதில்லை. மாநிலம் முழுவதும் குடிநீர் பிரச்னை ஏற்படும் சூழ்நிலையில் தேக்கி வைத்துள்ள நீரை வெளியேற்றுவதால், வறட்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது.

இது சம்பந்தமாக காலம் கடத்தாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

# தினமலர்

**விவசாயிகள்குறைதீர்வு கூட்டம்**

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம், வரும் 21ம் தேதி, காலை 10:30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெறும் என, மாவட்ட ஆட்சியர் அறிவித்து உள்ளார்.

**வனவிலங்குகளால் பயிர்கள் சேதமடைவதில் இருந்து தீர்வு:வயலை சுற்றி மின்வேலி அமைக்கும் விவசாயிகள்**

தியாகதுருகம்:விளைபயிர்களை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பதில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆண்டுதோறும் வனவிலங்குகளால் ஏற்படும் நஷ்டத்தில் இருந்து நிரந்தர தீர்வாக குறிப்பிட்ட தொகை பணத்தை செலவு செய்து வயல்களை சுற்றி மின்வேலி அமைத்து வருகின்றனர்.தியாகதுருகம் அடுத்துள்ள வேளாக்குறிச்சி, வரஞ்சரம், சிறுநாகலூர், தியாகை, வேங்கைவாடி, கூத்தகுடி, சிறுநாகலூர், குடியநல்லூர், கொட்டையூர் ஆகிய ஊர் களை சுற்றி வனப்பகுதி உள்ளன. இயற்கை காடுகள் அழிந்ததால் இங்கு வாழ்ந்த வனவிலங்குகள் பலவும் பாதுகாப்பு தேடி வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டது. அதில் சில வேட்டையாடப்பட்டன. மீதமுள்ள, மான், காட்டுப்பன்றி, மயில், முயல் உள்ளிட்ட விலங்குகள் மட்டும் உயிர்தப்பி காடுகளில் வசிக்கின்றன.அவைகளுக்கு போதிய உணவு, தண்ணீர் காடுகளில் கிடைக்காதபோது அருகில் உள்ள வயல்வெளிகளுக்கு வந்து அங்கு சாகுபடி செய்துள்ள பயிர்களை உண்கின்றன.

இதனால் விளைபயிர்கள் சேதம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்துவது வாடிக்கையாக நடந்து வருகிறது.முக்கியமாக வறட்சி காலங்களில் வனவிலங்குகள் வயல்வெளிகளுக்கு வந்து அதிகளவில் பயிர்களை சேதப்படுத்துகின்றன.வனப்பகுதியை ஒட்டி விளை நிலங்களை வைத்திருப்பவர்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். வனவிலங்குகளை விரட்டும்போது அவைகள் இறந்தால் வனத்துறையினரின் நடவடிக்கைக்கு பயந்து அவைகளை தடுக்கமுடியாமல் தவித்து வருகின்றனர்.வயலை

சுற்றி துணிகளை கட்டிவைத்தும், மின்விளக்குகளை எரியவிட்டும், பாடல்களை சத்தமாக ஒலிக்கவிட்டும் இன்னும் பல யுத்திகளை கையாண்டு வனவிலங்குகளை வயலுக்கு வராமல் தடுக்கும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.அப்படி இருந்தும் அவைகள் விளைபயிர்களை துவம்சம் செய்வது குறைவதில்லை. சமீபத்தில் கல்வராயன் மலையடிவாரத்தில் முகாமிட்ட 6 காட்டு யானைகள் ஏராளமான விளைபயிர்களை சேதப்படுத்திவிட்டு சென்றன.வனவிலங்குகளால் சேதமடைந்த பயிர்களின் விபரங்களை முறைப்படி தந்தால் அவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்ற வனத்துறையினரின் அறிவிப்பு சம்பிரதாய அளவிலேயே உள்ளது. சிலருக்கு மட்டும் நஷ்டஈடு வழங்கிவிட்டு அரசுக்கு கணக்கு காட்டிவிடுகின்றனர்.இதனால் வனத்துறையினரை நம்பி பயனில்லை என்பதை உணர்ந்த சில விவசாயிகள் வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் சோலார் மின்வேலி அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.வயலை சுற்றி இரும்பு குழாய்கள் நட்டு அதில் இன்சுலேட்டர்கள் பொருத்தி கம்பிகள் கட்டப்படுகின்றன. இதன் வழியே 24 மணிநேரமும் உயிருக்கு ஆபத்தில்லாத அளவில் "ஷாக்' ஏற்படுத்தும் வகையில் மின்சாரம் செலுத்தப்படுகிறது.இதற்கான மின்சாரம், சோலார் பேனல் மூலம் சூரிய ஒளி மின்சாரமாக மாற்றப்பட்டு பாட்டரிகளில் சேமிக்கப்படுகின்றன. இதில் இருந்து "எனர்ஜைசர்' கருவி மூலம் மின்சாரம் "ஸ்டெப்லைஸ்' செய்யப்பட்டு கம்பிகளில் செலுத்தப்படுகிறது.

இதனால் 12 வோல்ட் மின்சாரம் 6,000 வோல்டாக உயர்த்தப்படுகிறது. ஆனால் இதில் செல்லும் கரண்டின் அளவு குறைக்கப்பட்டு 500 மில்லி ஆம்ப்ஸ் மட்டும் கொடுக்கப்படுகிறது. இந்த மின்சாரம் 0.2 வினாடிக்கு ஒருமுறை விட்டு விட்டு செலுத்தப்படுகிறது. இதனால் சிறிய விலங்காக இருந்தாலும் இந்த மின்வேலியில் சிக்கி உயிரிழப்பதில்லை. மின்கம்பியில் "ஷாக்' உணரப்பட்டவுடன் அவைகள் வயலுக்குள் நுழையாமல் ஓடிவிடுகின்றன.இந்த மின்வேலியை தாண்டி யானைகள் கூட செல்வதற்கு அச்சப்பட்டு விலகி செல்வதால் விளைபயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. மலைப்பகுதியில் பயிர்சாகுபடி செய்பவர்கள் இம்முறைப்படி மின்வேலியை அதிக அளவில் அமைத்துள்ளனர். இதனை 10 ஏக்கர் பரப்பிற்கு அமைக்க 3.5 லட்சம் ரூபாய் செலவாகிறது. பரப்பளவு குறையும் போது அடிப்படையான செலவுகள் குறைவதில்லை. தற்போது அதிக நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இதனை அமைப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். வனவிலங்குகளால் ஆண்டுதோறும் ஏற்படும் நஷ்டத்தை

கணக்கிடும் போது மின்வேலி அமைப்பதற்கு ஒருமுறை முதலீடு செய்ய தயக்கமின்றி செலவிட விவசாயிகள் தயாராக உள்ளனர்.வனவிலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பதே நிரந்தர தீர்வு என்பதால் தியாகதுருகம் பகுதியில் வனப்பகுதியை ஒட்டி நிலம் வைத்திருக்கும் பலரும் இதனை அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்க சேர்மன் பதவியேற்பு**

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க சேர்மனாக அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் விநாயகமூர்த்தி பொறுப்பேற்றுக் கொண்டார்.திருக்கோவிலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க இயக்குனர்களுக்கான தேர்தல் கடந்த 28ம் தேதி நடந்தது. இதில் அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் விநாயகமூர்த்தி உட்பட 11 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.இதற்கான தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. விநாயகமூர்த்தி தலைவர் பதவிக்கும், பூராசாமி துணைத்தலைவர் பதவிக்கும் மனு தாக்கல் செய்தனர். எதிர்த்து யாரும் போட்டியிடாததால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டனர்.

நேற்று அலுவலக வளாகத்தில் பொறுப்பேற்பு நிகழ்ச்சி நடந்தது. செயலாட்சியர் சுகந்தலதா, செயலாளர் செல்வம் முன்னிலையில் விநாயகமூர்த்தி பொறுப்பேற்றுக் கொண்டார். சேர்மன் அறிவழகன், நகர செயலாளர் இளவரசன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் சுப்பு, பேரூராட்சி கவுன்சிலர் சம்பத், பேரவை இணை செயலாளர் அசோகன், வழக்கறிஞர் பிரிவு மாவட்ட இணை செயலாளர் ரஜினி, ஒன்றியக்குழு துணை சேர்மன் பழனி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சேகர், தேவியகரம் ஊராட்சி தலைவர் சேகர், எம்.ஜி.ஆர்., மன்ற நகர செயலாளர் ராமு, நகர துணை செயலாளர் அன்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை உற்பத்தியாளர் சங்க தலைவர் பதவியேற்பு**

செஞ்சி:செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தலைவர், துணை தலைவர் பதவியேற்பு விழா நடந்தது.சங்க செயலாளர் சதாசிவம் வரவேற்றார். வல்லம் ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் விநாயகமூர்த்தி தலைவராகவும், துணை

தலைவராக தேவராஜும் பொறுப்பேற்றனர்.செஞ்சி விவசாய கூட்டுறவு கடன் சங்க தலைவர் ரங்கநாதன், அண்ணா ஆசிரியர் நலக்கூட்டணி செயலாளர் குப்புதாசு வாழ்த்துரை வழங்கினார்.செயலாட்சியர் சந்திரசேகரன், இயக்குநர்கள் தவச்சித்திரன், உஷாராணி, ஜெயா, சாந்தி, கவிதா, பூங்குன்றம், வெங்கடேசன், தயாளன், சத்தியவாணி, மாவட்ட கவுன்சிலர் வெங்கடேசன், கூட்டுறவு சங்க தலைவர்கள் மொடையூர் ஏழுமலை, பென்னகர் அசோக், மேல்சித்தாமூர் ஏழுமலை, தையூர் குமார் மற்றும் சங்க ஊழியர்கள் ஊராட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் சற்று "அதிகரிப்பு'**

சத்தியமங்கலம்: கடந்த, பத்து நாட்களாக, நீலகிரி மலைப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்வதால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சற்று அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய அணையாக விளங்குவது பவானிசாகர் அணையாகும். இந்த அணையில் இருந்து வரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம், 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும், பவானி ஆற்றின் மூலம் பிரியும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை ம

சத்தியமங்கலம்: கடந்த, பத்து நாட்களாக, நீலகிரி மலைப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்வதால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சற்று அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய அணையாக விளங்குவது பவானிசாகர் அணையாகும். இந்த அணையில் இருந்து வரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம், 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும், பவானி ஆற்றின் மூலம் பிரியும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளிங்கராயன் பாசனப்பகுதி மூலம், 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவும் பாசன வசதி பெறுகிறது.

தவிர சத்தியமங்கலம், புன்செய்புளியம்பட்டி, கோபி, பவானி ஆகிய நகராட்சி மற்றும் 50க்கும் மேற்பட்ட டவுன் பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்தின் குடிநீர் பிரச்னைக்கு ஆதாரமாக விளங்குவதும் பவானிசாகர் அணைதான்.

இந்த அணைக்கு, நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாறும், நீர்வரத்தின் ஆதாரங்களாக விளங்குகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, நீலகிரி மலைப்பகுதியில் பருவமழை பொய்த்ததால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்தது.

அதே சமயம் அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிட்டதால்,

அணையின் நீர்மட்டம் குறைந்தது. நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து, 26 அடிக்கு வந்தது. இதனால், அணையில் இருந்து மின் உற்பத்தி முதல் மீன் பிடிப்பு வரை பாதிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த, பத்து நாட்களாக தென்மேற்கு பருவமழையால், நீலகிரி மலைப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்ததால், அணையின் நீர்மட்டம் சற்று அதிகரித்துள்ளது. நேற்று மாலை, 3 மணியளவில் அணையின் நீர்மட்டம், 33.64 அடியாக இருந்தது. அணையின் மொத்த நீர்பிடிப்பு உயரம் சகதி நீங்கலாக, 105 அடியாகும். அணைக்கு வினாடிக்கு, 440 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பவானி ஆற்றில் வினாடிக்கு, 200 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 5 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளது.

**வரத்து குறைவால் வாழைத்தார் விலை உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: திருமண சீஸனால், வாழையின் தேவை அதிகரித்துள்ள நிலையில், வரத்து குறைவால் வாழை தார் ஒன்று, 50 முதல், 100 ரூபாய் வரை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் வேட்டைக்காரன்கோவில், பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கிணற்று நீர் மற்றும் போர்வெல் மூலம், 15 ஆயிரம் ஏக்கரில் கதளி, நேந்திரம், ரோபஸ்ட்ரா, ரஸ்தாளி, மொத்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழை பயிரிடப்பட்டுள்ளன.

நடப்பாண்டு வாழை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதால், வாழை சாகுபடி பரப்பு அதிகரித்ததுள்ளது. வாழை அறுவடை சீஸன் நிறைவடையும் தருவாயில் உள்ளது. அனைத்து பகுதிகளிலும் வாழை குலை வெட்டும் பணி தீவிரமாக நடக்கிறது. வழக்கமாக வாழை சீஸன் காரணத்தில், கோபி வேளாண்மை விற்பனை சங்கத்துக்கு, 7,000 தார்கள் வரை வரத்தாகுகிறது. சீஸன் நிறைவு காரணமாக, 4,000 தார் மட்டுமே வரத்தாகிறது. திருமண சீஸன் காரணமாக வாழையின் தேவை அதிகரித்துள்ளதால், வாழை விலை தார் ஒன்றுக்கு, 50 முதல், 100 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி, கதளி ஒரு கிலோ, 31.50 ரூபாய், நேந்திரம் ஒரு கிலோ, 31 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 400 ரூபாய், செவ்வாழை, 580 ரூபாய், ரோபஸ்ட்ரா, 280 ரூபாய், மொத்தன், 300 ரூபாய், பச்சைநாடன், 200 ரூபாய், பூவன், 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

விவசாயிகள் கூறியதாவது:
நிலத்தடி நீர் மட்டம் வாழைக்கு தகுந்தாற்போல் உள்ளதால், நடப்பாண்டு கதளி, ரஸ்தாளி போன்றவை அதிகளவில் பயிரிட்டோம். வாழையை பொருத்தவரையில் ஓராண்டு பயிரிட்டால், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை வாழை குலை அறுவடை செய்யலாம். முதலில் வரும் குலை நன்றாக இருக்கும். அடுத்த ஆண்டு பக்கவாட்டு கன்றுகள் மூலம் குலை வரும் என்பதால், தார் பிடிப்பு குறைவாக காணப்படும். கோபி சுற்று வட்டாரத்தில், சாகுபடி செய்யப்பட்ட வாழை அறுவடை சீஸன் நிறைவடையும் தருவாயில் உள்ளது. திருமண சீஸன் காரணமாக, வாழையின் தேவை அதிகரித்துள்ளதால், வரை விலை தார் ஒன்றுக்கு, 50 முதல், 100 ரூபாய் வரை உயர்ந்துள்ளது, என்றார்.

**விளைச்சல் அதிகரிக்க கோடை உழவு திருவாரூர் கலெக்டர் வேண்டுகோள்**

தஞ்சாவூர்: "மழை நீர் வீணாகாமல் மண்ணில் தங்குவதற்கும், பயிர் விளைச்சல் அதிகரிப்பதற்கும், கோடை உழவை விவசாயிகள் அவசியம் செய்ய வேண்டும்' என, திருவாரூர் கலெக்டர் நடராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.
இதுகுறித்து வெளியிட்ட அறிக்கை:
கோடையில் உழவு செய்வது மிகவும் அவசியம். இந்த உழவு மேற்கொண்ட நிலத்தில், 6 செ.மீ., ஆழம் வரை நிலத்துக்குள் மழை நீர் செல்லும். இதன்மூலம் மண் ஈரம் ஆவியாவதும் குறையும். கரிசல் மண்ணில் ஏற்படும் வெடிப்பு தவிர்க்கப்படும். இதனால், நிலத்தில் மழை நீர் வேகமாக உறிஞ்சப்படும்.
மழையால் ஏற்படும் மண் அரிப்பும் தடுக்கப்படும். மண் எப்போதும் புதிதாகவே இருப்பதுடன், நெல் விதைக்கவும் ஏதுவாக இருக்கும். களைகளின் இனவிருத்தி குறைக்கப்பட்டு, அதன்மூலம் நிலத்திலிலுள்ள அதிகப்படியான நீர் ஆவியாகாமல் தடுக்கப்படும். களை எடுக்கும் செலவை குறைப்பதுடன், நல்ல மகசூல் கிடைக்க உதவும். கோடை உழவால் மண் ஈரம் சேமிக்கப்படுவதால், பயிர் விளைச்சல் பெருகவும் வாய்ப்புள்ளது. கோடை மழை பெய்யும் போது, உழவு செய்ய வேண்டும். மண்ணின் அடிப்பகுதியிலுள்ள ஈரப்பதம் காக்கப்படும். மண்ணுக்கும் நல்ல காற்றோட்டம் ஏற்படும். மண்ணின் கீழுள்ள பூச்சி, பூஞ்சானம் வெளிவரும். பெய்கின்ற மழை நீர் வீணாகாது, மண்ணில் சேகரிக்கப்படும்.
நெற்பயிர் சாகுபடிக்கு தேவையான நீர்தேவை, 20 சதவீதம் அளவுக்கு

குறைக்கப்படுகிறது. எனவே, கோடை உழவு செய்து, விவசாயிகள் பயன்பெற வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாய குழு கடன் கோரிக்கை**

குஜிலியம்பாறை:குஜிலியம்பாறை ஒன்றியம் ஆணைபட்டியில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயல்படுகிறது. ஆணைபட்டி, செட்டியூர், தீண்டாக்கல் உள்ளிட்ட குக்கிராமங்களை சேர்ந்த, விவசாயிகள், விவசாய வேளாண் குழு என்ற பெயரில், கூட்டுறவு வங்கியில், கடன் பெற்றனர். இக்கடனை, கடந்த பிப்ரவரியில், திருப்பி செலுத்தினர். மீண்டும் கடன் வழங்க கோரி, நில ஆவணங்களுடன், விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்து நான்கு மாதங்களாகியும், கடன் கிடைக்காததால்,இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.விவசாய சங்க மாவட்ட தலைவர் ராஜரத்தினம் கூறியதாவது,""கடனை முறையாக செலுத்தியவர்களுக்கு, நான்கு மாதங்களாகியும் கடன் வழங்கவில்லை. அவர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**வறட்சி நிவாரணத்தில் ஏமாற்றம்கண்ணை கŒக்கும் மிளகாய் விவசாயிகள்**

சாயல்குடி:கடலாடி தாலுகாவில் மிளகாய் விவசாயிகளில் ஒரு பகுதியினருக்கு, வறட்சி நிவாரணம் வழங்காததால், ஏமாற்றம் அடைந்துள்ளனர். சாயல்குடி அருகே எம்.கரில்குளம் பகுதி ஒச்சத்தேவன்கோட்டை, பெருமாள் தலைவனேந்தல், காணிக்கூரில் 90 சதவீதம் மிளகாய் பயிரிட்டனர். மழையின்றி, மிளகாய் செடிகள் கருகின. இதனால், செலவு செய்த பணத்தில், பத்து சதவீதம் கூட விளைச்சல் இன்றி, விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், தமிழக அரசு, மிளகாய் விவசாயிகளுக்கும், வறட்சி நிவாரனமாக, ஏக்கருக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும், என அறிவித்தது மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. கடலாடி தாலுகாவில் எஸ்.தரைக்குடி பகுதிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டது, சாயல்குடி அருகே எம்.கரிசல்குளம் பகுதியில் உள்ள ஒச்சத்தேவன்கோட்டை, கரிசல்குளம், பெருமாள் தலைவனேந்தல், காணிக்கூர் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் ஏமாற்றத்தில் உள்ளனர்.

சாயல்குடி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறுகையில், ""வருவாய் துறையினர் தான் பாதிப்பு குறித்து ஆவணங்களை அனுப்புவர். இருந்தாலும்,

விவசாயிகள் பயிரிட்ட இடங்களின் சிட்டா, அடங்கலுடன், தாசில்தாரிடம் மனு கொடுத்தால், நிவாரணம் கிடைக்க வழி செய்வோம்," என்றார்.

கடலாடி தாசில்தார் அமிர்தம் கூறுகையில், ""கடலாடி தாலுகாவில் எஸ்.தரைக்குடி பகுதிக்கு மட்டும் தான், வறட்சி நிவாரணத்தொகை வந்தது. மற்ற பகுதிகளுக்கு வரவில்லை. வி.ஏ.ஓ., வருவாய் ஆய்வாளர் ஆகியோர், சாகுபடி நிலங்களை பார்த்து முன்னதாகவே அறிக்கை அனுப்பியிருக்க வேண்டும். மனு கொடுக்கச் சொல்லுங்கள் அனுப்பி வைப்போம், நிவாரணம் வரும் என உறுதி அளிக்க முடியாது," என்றார்.

**தென்காசியில் காய்கறி, பூக்கள் விலை "கிடு கிடு'**

தென்காசி : தென்காசியில் காய்கறி மற்றும் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தென்காசியில் காய்கறி மற்றும் பூ மார்க்கெட்டிற்கு சுற்றுப்பகுதியில் உள்ள ஊர்களான பாவூர்சத்திரம், சுரண்டை, ஆயிரப்பேரி, கடப்போகத்தி ஆகிய ஊர்களில் இருந்து வியாபாரிகள் காய்கறிகளை மார்க்கெட்டிற்கு கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். இந்நிலையில் முகூர்த்த நாளை முன்னிட்டு தென்காசி காய்கறி மற்றும் பூ மார்க்கெட்டில் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இது குறித்து வியாபாரி மருதய்யா கூறுகையில் : முகூர்த்த நாளை (இன்று) முன்னிட்டு தற்போது மார்க்கெட்டில் விற்பனையாகும் காய்கறிகளின் விலை தாறுமாறாக ஏறியுள்ளது .ரூ.45க்கு விற்ற கேரட் தற்போது 80 ரூபாயாகவும், ரூ.40க்கு விற்ற பீன்ஸ் 60க்கும். மேலும் தக்காளி கிலோ ரூ.60, இஞ்சி கிலோ ரூ.200, முட்டைகோஸ் 60 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது காய்கறிகளுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியே இந்த விலையேற்றத்திற்கு காரணம் என தெரிவித்தார்.

* பூக்கடை வியாபாரி சம்பா சரவணன் கூறுகையில் : ரூ.150க்கு விற்ற மல்லிகை 350க்கும், வழக்கமாக சீசன் காலங்களில்ரூ.50க்கு விற்ற மல்லிகைப்பூ ரூ.400க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரோஜா பூ மாலை பெரியது ரூ.500 முதல் விற்பனை செய்யப்படுகிறது. அரளிப் பூ கிலோ ரூ.200க்கும், சம்மங்கி பூ கிலோ ரூ.300க்கும் விற்பனை செய்யப்படுகிறது இன்று முகூர்த்த நாள் மற்றும் வரத்து குறைவு காரணமே இந்த விலையேற்றம் என தெரிவித்தார்.

தினமணி

**மீன்வளத் துறையை மேம்படுத்த நபார்டு வங்கி ரூ.10 கோடி நிதி**

மீன் வள மேம்பாட்டு திட்டங்களுக்காக நபார்டு வங்கி ரூ.10 கோடி நிதியளிக்க உள்ளது.

இது குறித்து மீன்வளத் துறை அதிகாரி கூறியதாவது, மீன் வளத் துறைக்கு நபார்டு வங்கி அளிக்க உள்ள ரூ.10 கோடியை, பவானிசாகர் பகுதியில் மீன் வளர்ப்பு டேங்குகள் கட்ட பயன்படுத்தப்படும். ஏற்கனவே உள்ள மீன் டேங்குகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் சுமார் 300 டன் மீன்கள் கிடைக்கின்றன. ஜூன்-ஜூலை மாதங்களில் இந்த டேங்கில் ஜிலேபி, ரோகு, கட்லா போன்ற மீன் வகைகளை விடுவோம். பருவ மழை துவங்கி மழை நீர் கிடைத்ததும், இங்கு மீன்கள் நன்கு வளர்ந்து, அவை ஒப்பந்ததாரர்களுக்கு விடப்படும். ஏற்கனவே இதுபோன்ற சில டேங்குகள் பவானிசாகர் பகுதியில் உள்ளன. இந்த நிதியைக் கொண்டு மேலும் டேங்குகள் அமைப்பதன் மூலம், கிடைக்கும் மீன்களின் எண்ணிக்கையை 50 லட்சமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மீன் வளத் துறை சார்பில் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

**பவானிசாகர் அணையில் இருந்து ஒரே தேதியில் அனைத்து பாசனங்களுக்கும் தண்ணீர் திறக்க விவசாயிகள் நலச்சங்கம் வலியுறுத்தல்**

பவானிசாகர் அணையில் இருந்து அனைத்து பாசனங்களுக்கும் ஒரே தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, இச்சங்கத்தின் தலைவர் செ.நல்லசாமி அனுப்பியுள்ள மனுவில்:

கீழ்பவானிப் பாசனம் 1955-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. சிக்கன நீர் நிர்வாகம் நடைபெற்று வரும் சிறந்த பாசனமாக இத்திட்டம் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 32.8 டி.எம்.சி ஆகும். இப்போதைய நீர் இருப்பு 1.09 டி.எம்.சி மட்டுமே. அணைக்குப் போதிய நீர் வந்த பிறகே தண்ணீர் திறக்க முடியும்.

கீழ்பவானிப் பாசனத்தின் மொத்தப் பரப்பளவு 2.07 லட்சம் ஏக்கர். பழைய பவானி பாசனங்களின் (தடப்பள்ளி-அரக்கன்கோட்டை, காளிங்கராயன்) பரப்பளவு 43,000 ஏக்கர்

ஆகும்.காவிரி இறுதித் தீர்ப்பு படி, கீழ்பவானிப் பாசனத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நீர் அளவு 28 டி.எம்.சி. பழைய பாசனங்களின் ஒதுக்கீடு 8.2 டி.எம்.சி. பருவ மழை தொடங்கிய பின்பே பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டும் எனக் காவிரி இறுதி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது.

1.6.2013-ம் தேதியிலிருந்து தண்ணீர் ஆண்டும், பாசனப் பருவமும் தொடங்கியுள்ளது. ஆங்காங்கே பருவ மழையும் பொழியத் தொடங்கிவிட்டது. ஆனால் இதுவரை அணைகளுக்கு எதிர்பார்த்த தண்ணீர் வந்து சேரவில்லை.கீழ்பவானிப் பாசனத்துக்கும், பழைய பவானிப் பாசனங்களுக்கும் திறப்பதற்கான தண்ணீர் அணைக்கு வந்து சேர்ந்த பின்பு, ஒரே தேதியில் அனைத்துப் பாசனங்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட வேண்டும். வெவ்வேறான தேதிகளில் திறந்துவிடக் கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

**கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணை எப்போது திறக்கப்படும்? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்குபாபநாசம் அணையில் இருந்து இம்மாதம் 15 ம் தேதி பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமிரவருணி பாசனத்தில் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை கார்பருவ சாகுபடியும், நவம்பர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை பிசான பருவசாகுபடியும் செய்யப்படுகிறது. கார் பருவ சாகுபடிக்கு ஜூன் மாதமும், பிசானபருவ சாகுபடிக்கு நவம்பர் மாதமும் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம்.

பாபநாசம் அணையில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11கால்வாய்கள் மூலம் 86,107 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகிறது. பிசானபருவ சாகுபடி அறுவடை முடிந்த நிலையில் அணைகளில் உள்ள நீர் இருப்பைபொறுத்து முன் கார் பருவ சாகுபடிக்கு (பழந்தொழி சாகுபடி) பாபநாசம்அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதுண்டு. கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து வருவதால் இம்மாவட்டத்தில் உள்ள பிரதான அணைகளின் முழு கொள்ளளவை எட்டுவதில்லை. ஆகவே கடந்த சில ஆண்டுகளாக முன் கார் பருவ சாகுபடி செய்யவும் தண்ணீர் திறக்கப்படவில்லை. கடந்த 2012ல் தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் கார் பருவ சாகுபடியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. நிகழ் பருவமான தென்மேற்கு பருவ மழை

தொடங்கி தற்போது பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

**இன்று அணைகளின் நீர்மட்டம் நிலவரம்:**

பாபநாசம் அணையின்நீர்மட்டம் 1.55 அடி உயர்ந்து 62.55 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 630.56 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் 1 மி.மீ மழை பதிவாகியுள்ளது.அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 54.75 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 78.67 அடியாக இருந்தது. அணையில் 1 மி.மீமழை பெய்துள்ளது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 71.32 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 20 கனஅடி நீர்வரத்து இருந்தது.அணையில் இருந்து 275 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கடனாநதி அணையின் நீர்மட்டம் 40.00 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு25 கனஅடி நீர்வரத்து இருந்தது. ராமநதி அணையின் நீர்மட்டம் 52.00 அடியாகஇருந்தது. அணையில் 2 மி.மீ மழை பதிவாகியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 60கனஅடி நீர்வரத்து இருந்தது.

ஜூன் 15 ல் பாபநாசம் அணை திறப்பு? நிகழ் கார் பருவம் சாகுபடி செய்ய பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை அரசின் அனுமதி கிடைக்கவில்லை. இப்பாசனத்தில்பல ஊர்களில் நாற்று பாவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. எனவே தாமதமின்றி பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு அனுமதி ஓரிரு நாளில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வருகிற 15 ம் தேதி அணை திறக்க வாய்ப்புள்ளது என பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**100 விவசாயிகளுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு**

கடலூர் மாவட்டத்தில், புதிதாக கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு 100 விவசாயிகளுக்கு மானியக்கடன் வழங்க தமிழக அரசு ரூ.5 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த 2011-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய தானே புயலில் 100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் பாதிக்கப்பட்டன. பின்னர் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம்

முழுமையாக பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு தலா ரூ.50 ஆயிரமும், பகுதியாக சேதம் அடைந்த கோழிப்பண்ணைகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் நிவாரண உதவிகளையும் தமிழக அரசு வழங்கியது.

இதை அடுத்து நாமக்கல்லுக்கு இணையாக கோழிகளையும், கோழிமுட்டைகளையும் உற்பத்தி செய்யவும், தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ளும் நோக்கத்திலும் உலக வங்கி நிதி உதவியின் மூலம் 50 சதவீதம் மானியத்துடன் கூடிய கடன் உதவியையும் வழங்கியது.

அதன்படி, கடந்த ஆண்டு கடலூர், விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த 230 விவசாயிகளுக்கு தலா ரூ.5 லட்சம் வீதம் மொத்தம் ரூ.11 கோடியே 50 லட்சம் நிவாரண உதவியை வழங்கியது.

தொடர்ந்து இந்த ஆண்டு புதிதாக கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கு 100 விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்குவதற்கு ரூ.5 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து அரசு உயரதிகாரி ஒருவர் கூறுகையில், புதிய கோழிப்பண்ணைகள் அமைப்பதற்காக தமிழக அரசு ரூ.5 கோடி நிதியை கடலூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான பயனாளிகளை விரைவில் தேர்வு செய்து கடன் உதவி வழங்கப்படும். பயனாளிகள் தேர்வு குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவித்தார்.

வறட்சியால் பாதிப்பு: நிவாரணம் கோரி விவசாயிகள் ஆட்சியரிடம் மனு

வறட்சியால் பாதிக்கப்பட்ட கீழப்பிடாவூர், கே. பெருங்கரை உள்பட பல கிராமங்களில் உரிய நிவாரணம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் மனு கொடுத்தனர்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் மு. கந்தசாமி, மானாமதுரை ஒன்றியச் செயலர் எஸ். முத்துராமலிங்கபூபதி, கீழப்பிடாவூர் ஊராட்சித் தலைவர் காளைலிங்கம் ஆகியோர் தலைமையில் கீழப்பிடாவூர் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த 61 விவசாயிகளும், கே. பெருங்கரை கிராமத்தைச் சேர்ந்த 43 விவசாயிகளும் மனு கொடுத்தனர்.

இது குறித்து மார்க்சிய கம்யூ. மாவட்டச் செயலர் கந்தசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

முழுமையாக வறட்சி நிவாரணம் வழங்கவில்லை. இதில் கீழப்பிடாவூர் ஊராட்சி கிராமங்களும் அடங்கும்.

மானாமதுரை மேலப்பசளை கிராமத்தில் 400 ஏக்கரில் விவசாயம் பொய்த்துப் போய்விட்டது. திருப்புவனம் தாலுகா பழையனூர், ஓடாத்தூர் உள்பட 40 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேபோல் திருப்புத்தூர், எஸ். புதூர், சிங்கம்புணரி, கல்லல், இளையான்குடி ஆகிய பகுதிகளில் நிவாரணக் கணக்கெடுப்பு விடுபட்டுள்ளது. எனவே மறு கணக்கீடு செய்து பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.